முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 14.10.2024

EA 11/2022 in EP 2/2018

ம.சா.1 சாகுல் ஹமீது

எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சென்னையில் வேலை பார்க்கிறேன். நான் குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் கடந்த இரண்டு ஆண்டுகளாக குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகிறேன். நான் மற்றும் முதல் மனுதாரர் மேற்படி மனுவை கட்டளை 21 விதி 99 ன் கீழ் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அசல் வழக்கு மற்றும் முதல் மேல்முறையீடு மற்றும் இரண்டாம் மேல் முறையீடு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாது என்றும் மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றும் தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

நிறைவேற்றுகை மனு எ பட்டிகை சொத்தில் மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நிறைவேற்றுகை மனு பி பட்டிகை சொத்தில் எங்களுக்கு புழங்கி கொள்ளும் உரிமை தான் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் திரு.புருஷோத்தமன் என்றால் சரிதான். தீர்ப்பு கடனாளி சிவக்குமாரின் வழக்கறிஞரும் திரு.புருஷோத்தமன் என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கிற்காக எனக்கு தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தீர்ப்பு கடனாளி சிவக்குமார் இந்த வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் நான் தற்போது தான் அவரை பார்க்கிறேன். நான் தீர்ப்பு கடனாளி சிவக்குமாருடன் நீதிமன்றத்திற்கு வந்து விட்டு தற்போது தான் அவரை பார்ப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் நிறைவேற்றுகை மனு எ பட்டிகை சொத்து குறிப்பிட்டு காட்டப்படவில்லையென்றால் நான் வழிப்பாதையை குறித்து குறிப்பிட்டுள்ளேன். எங்கள் மனுவில் எ பட்டிகை ரீசர்வே எண் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான்.

எனக்கு என் அப்பா 26.05.2015 அன்று செட்டில் மென்ட் ஆவணத்தின் படி கொடுத்தார் என்றால் சரிதான். என் அப்பா எனக்கு செட்டில் மென்ட் ஆவணம் எழுதி கொடுத்தாக காட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய செட்டில்மென்ட் ஆவணத்தை தாக்கல் செய்யாததால் என் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 8/2011 ல் 16.12.2013 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டதென்றால் எனக்கு தீர்ப்பு தேதி சரியாக தெரியாது. மனுவில் அசல் வழக்கு எண்.8/2011 மற்றும் நிறைவேற்றுகை மனு எண்.2/2018 பட்டிகை சொத்து

சொல்லப்படவில்லையென்றால் சரியல்ல. சாட்சிறிடம் நிறைவேற்றுகை மனு பி பட்டிகை காட்டப்பட்டு அதில் 2.530 சென்று என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சாட்சியின் மனுவில் பி பட்டிகை சொத்தாக 4.970 சென்று என குறிப்பிடப்பட்டுள்ளதாக கேட்கப்பட்டது சாட்சி அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அசல் வழக்கு எண்.8/2011 மற்றும் நிறைவேற்றுகை மனு எண்.2/2018 பட்டிகை சொத்து மற்றும் மனு எண்.11/2022 சொத்தும் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதனால் எங்கள் மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல. தவறு ஏதேனும் வந்திருக்கலாம்.

அசல் வழக்கு எண்.8/2011 ல் தீர்ப்பு கடனாளி பி பட்டிகை சொத்தில் போட்ட கல் மற்றும் மணலை அப்புறப்படுத்த தீர்ப்பானது என்றால் ஆம் அந்த வழக்கில் எங்களை தரப்பினராக சேர்க்கவில்லை. என் அப்பா எனக்கு 26.5.2015 அன்று செற்றில்மென்ட் எழுதிய பின்பு தான் உரிமை வந்தது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.8/2011 ல் தீர்ப்புரை 16.12.2013 அன்று பிறப்பிக்கப்பட்டபின் 26.5.2015 ல் தான் எனக்கு உரிமை ஏற்பட்டுள்ளதால் இந்த மனுவை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மனுதாரர்கள் பிரச்சனைக்குரிய பாதையில் கல்லும் மண்ணும் தீர்ப்பு கடனாளி சிவக்குமார் தான் போட்டார் என்றால் நாங்களும் சேர்ந்துதான் போட்டோம்.

என் செற்றில் மென்ட் ஆவணத்தில் பாதையின் அளவு 11 அடி வீதியும் 105 அடி நீளமும் என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரியாகத்தான் இருக்கும். என் செற்றில்மென்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பாதை அவகாசம் மேற்படி பாதையின் வழியாக மின் லைன் கேபிள் லைன் கழிவு நீர் அவகாசம் எல்லாம் என் தகப்பனாரின் விலை ஆதாரத்தில் குறிப்பிடப்படவில்லையென்றால் சாட்சியம் கிரய ஆவண எண்.898/2000 ஆவணத்தின் சான்றிட்ட நகல் காட்டப்பட்டு அது சாட்சியின் தகப்பனார் பெயரிலான விலை ஆவணம் எனக் கேட்கப்பட்டது. சாட்சி ஆம் என ஒப்பு கொண்டார் அது **எ.ம.சா.ஆ 1** ஆக குறியிடப்படுகிறது. சாட்சி எ.ம.சா.ஆ.1 ஐ பார்வையிட்டு மேற்சொன்ன அவகாசங்கள் குறிப்பிடப்படவில்லை என தெரிவித்தார்.

எ.ம.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைத்துள்ள வரைபடம் மற்றும் என் செற்றில் மென்ட் ஆவணத்துடன் இணைத்துள்ள வரைபடம் மற்றும் ம.சா.ஆ.1 வரைபடத்திலும் பாதை வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரியல்ல 3 வரைபடங்களும் ஒன்று போல் உள்ளது. இருதரப்பு வழக்கறிஞர்களின் ஒப்புதலுடன் மனுதாரர் பெயரிலான செற்றில் மென்ட் ஆவண எண். 1227/2015 **ம.சா.ஆ.4** ஆக குறியிடப்படுகிறது. என் அப்பா மற்றும் நிறைவேற்றுகை மனு மனுதாரர் மற்றும் தீர்ப்பு கடனாளி ஆகிய மூவரும் நாராயண நாயர் என்பவரிடம் இருந்து விலை வாங்கினார் என்றால் என் அப்பா நாராயணநாயரிடமிருந்து விலை வாங்கினார் மற்றவர்கள் யாரிடமிருந்து விலை வாங்கினார்கள் என தெரியாது.

நாராயணநாயர் அவர் சொத்துக்களை மனைகளாக பிரித்து பாதை 11 அடி வீதி 105 அடி

நீளத்திற்கு அமைத்தார் என்றால் எங்கள் ஆவணத்தின் படி அவ்வாறு உள்ளது. நிறைவேற்றுகை மனுதாரர் அவர் விலை வாங்கிய சொத்தில 6.95 ச.லிங்க்ஸ் இடத்தை அந்த பாதையின் விரிவாக்கத்திற்கு விட்டு கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தீர்ப்பு கடனாளி பாதையில் 3 அடி உயரத்திற்கு கல்லையும் மண்ணையும் கொண்டு நிரப்பினார் என குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இந்த பாதையை நிறைவேற்றுகை மனுதாரர் நகராட்சிக்கு ஒப்படைக்கவில்லை என்றால் ஆம் மற்றவர்கள் ஒப்படைக்க முன் வந்தார்கள் மனுதாரர் முன்வரவில்லை. அந்த பாதை தற்போதும் தனிநபர் பாதையாக இருந்து வருகிறதென்றால் ஆம்.

நிறைவேற்றுகை மனுதாரர் நான் பாதையை உபயோகிப்பதற்கு எந்த பிரச்சனையும் செய்யவில்லையென்றால் சரியல்ல. நானும் தீர்ப்பு கடனாளியும் இந்த பாதை வழியாகத்தான் கார் மற்றும் இருசக்கர வாகனங்களை கொண்டு செல்கிறோம் என்றால் சரிதான். தீர்ப்பு கடனாளி வீடு கட்டும் சமயம் பாதையை உயர்த்த 4 அடி உயரத்திற்கு கல் மண் போட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் அண்ணனின் பெயர் பசீர். அவர் அசல் வழக்கு 8/2011 ல் சாட்சியம் அளித்தார் என்றால் ஆம்.

அ.வ.எண்.8/2011 நடைபெற்ற சமயம் என் தகப்பனார் வீடு அந்த இடத்தில் உண்டு என்றால் சரிதான். வழக்கில் பாதையில் போட்ட கல் மண்ணை அப்புறப்படுத்த வழக்கில் தீர்ப்பானது என்றால் சரிதான். அதை எதிர்த்து தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். சிவக்குமாரின் மேல்முறையீடும் தோல்வியடைந்தது என்றால் எனக்கு தெரியாது. அ.வ.8/2011 தீர்ப்பு தீர்ப்பாணை தீர்ப்பு கடனாளி சிவக்குமாருக்கும் எதிராக மட்டும் பிறப்பிக்கப்ட்டது என்றாலும் அனைவருக்கும் எதிராகவும் பிறப்பிக்கபட்டதல்ல என்றாலும் சரியல்ல. அந்த பாதையில் என் வீடு வாதியின் வீடு மற்றும் தீர்ப்பு கடனாளி சிவக்குமார் வீடு மட்டும் உள்ளது என்றால் ஆம் அதன் பின் 4 மனைகள் உள்ளது.

பி பட்டிகை பாதையில் எந்த வித கழிவு நீர் ஓடை கிடையாது என்றால் ஆம். சந்திரசேகர் பாதையில் பைப் அமைத்து கழிவு நீர் விட்டு வருகிறார். அவ்வாறு சொல்வதை ஆணையர் நியமித்தால் பார்க்கலாம் என்றால் ஆம். நிறைவேற்றுகைமனுதாரர் அவ்வாறு கழிவு நீர் பாதையில் விடவில்லையென்றாலும் நான் இந்த மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் வீட்டு கழிவு நீரை என் வீட்டினுள் தொட்டி அமைத்து வெளியேற்றுகிறேன். நிறைவேற்றுகை மனுதாரரும் அவர் வீட்டிற்குள் தொட்டி அமைத்து கழிவு நீரை வெளியேற்றுகிறார் என்றால் எனக்கு அது தெரியவில்லை அவர் பைப் வைத்து கழிவுநீர் வெளியேற்றுகிறார்.

நிறைவேற்றுகை மனு பி பட்டிகை சொத்தில் கல் மற்றும் மண் கொண்டு உயர்த்தியதால் நிறைவேற்றுகை மனுதாரர் வீட்டில் நீர் தேங்குகிறது என்றால் எங்கள் அனைவரின் வீடும் பாதையில் இருந்து அரை அடி ஆழத்தில் உள்ளது நிறைவேற்றுகை

மனுதாரரின் வீடு மட்டும் ரொம்ப பள்ளத்தில் உள்ளது ஆகையால் நீர் தேங்குகிறது. சிவக்குமார் வீடு கட்டுவதற்கு முன் யார் வீட்டிலும் தண்ணீர் தேங்குவது கிடையாது என்றால் சரியல்ல.

என் நிருபண வாக்குமூல சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. சிவக்குமார் பதையை கல்லும் மண்ணும் கொட்டி உயர்த்தியதால் நிறைவேற்றுகை மனுதாரர் வீட்டில் மழை நீர், கழிவு நீர் தேங்குகிறது என்றால் சரியல்ல. சிவக்குமார் பதையை உயர்த்தாமல் இருந்திருந்தால் நிறைவேற்றுகை மனுதாரர் வீட்டில் மழை நீர், கழிவு நீர் தேங்காது என்றால் சரியல்ல. சிவக்குமார் வழக்கு தீர்ப்புக்கு பின்பு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தில் அனைத்து மனுக்களும் தாக்கல் செய்த பின்பு என்னை இந்த மனுவை தாக்கல் செய்ய ஏற்பாடு செய்துள்ளார் என்றால் சரியல்ல.

பி பட்டிகை சொத்தில் எனக்கு பாதை அவகாசம் மட்டும் தான் உண்டு என்றாலும் தனிப்பட்ட உரிமை இல்லையென்றாலும் சரியல்ல. எனக்கு ஆட்சேபனை மனு தாக்கல் செய்ய உரிமை இல்லையென்றாலும் சரியல்ல. என் மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் அது தள்ளுபடி செய்யபட வேண்டுமென்றாலும் சரியல்ல. என் மனு செலவுத்தொகையும் தள்ளுபடி செய்யபட வேண்டுமென்றாலும் சரியல்ல.